(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** **22 UTM 305**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் – 2023**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 50**

**மூன்றாம் பருவம்** **நேரம் : 3 மணி**

## பகுதி – 3

## நன்னூல் சொல்லதிகாரம்

### பகுதி – அ (10 x 1 = 10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. வல்லோர் அணிபெறச் செய்வது எது?
   அ) சிற்பம் ஆ) செய்யுள் இ) ஓவியம் ஈ) கட்டடம்
2. வேற்றுமை எத்தனை வகைப்படும்?
   அ) ஐந்து ஆ) ஆறு இ) ஏழு ஈ) எட்டு
3. செய்பவன், கருவி உள்ளிட்ட அறுவகைப் பொருளையும் தருவது எது?
   அ) தெரிநிலை வினை ஆ) குறிப்பு வினை இ) முன்னிலை வினை ஈ) வியங்கோள் வினை
4. செய்யுளின் இடையில் நிற்கும் சொல் முதலிலும் இறுதியிலும் நின்று இயைந்து பொருள் தரும் பொருள்கோள் யாது?
   அ) யாற்றுநீர் பொருள்கோள் ஆ) மொழிமாற்றுப் பொருள்கோள்
   இ) தாப்பிசைப் பொருள்கோள் ஈ) பூட்டுவிற் பொருள்கோள்
5. ஏகார இடைச்சொல் எத்தனைப் பொருள்களைத் தரும்?
   அ) ஆறு ஆ) எட்டு இ) பத்து ஈ) பன்னிரண்டு

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. வழக்கின் வகைகளைச் சுட்டுக.
7. திரிதல் இல்லாத பெயராக வரும் வேற்றுமை எது?
8. தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?
9. விடை எத்தனை வகைப்படும்?
10. ஓரறிவு உயிர்க்கு இரண்டு சான்று தருக.

### பகுதி – ஆ ( 5 x 3 = 15 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) செய்யுள் என்பதற்கு நன்னூலார் தரும் விளக்கம் யாது?

**(அல்லது)**

ஆ) பெயர்ச் சொல்லின் பொதுவிலக்கணத்தை எழுதுக. **(த.பி.பா.)**

12. அ) இரண்டாம் வேற்றுமை எவ்வெப் பொருளில் வரும்? சான்றுடன் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உருபு மயக்கம் என்றால் என்ன?

13. அ) வினைமுற்றின் இலக்கணம் தருக.

**(அல்லது)**

ஆ) இடைப்பிறவரல் என்றால் என்ன?

14. அ) இடவழுவமைதி என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

**(அல்லது)**

ஆ) இயற்கை, செயற்கைப் பொருட்களைக் கூறவேண்டிய முறை குறித்து பவணந்தியார் உரைப்பன யாவை?

15. அ) கொல் எனும் இடைச்சொல் எப்பொருள் தரும்? சான்று காட்டி எழுதுக.

**(அல்லது)**

ஆ) முன்னிலை அசைச்சொற்கள் யாவை? எடுத்துக்காட்டுடன் எழுதுக.

## பகுதி – இ ( 5 x 5 = 25 மதிப்பெண்கள்))

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4 & K5)**

16. அ) பெயர்ச்சொல்லின் பொதுவிலக்கணத்தைத் தந்து மூவகை மொழிகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) ஆகுபெயரின் வகைகளைச் சான்றுடன் விவரிக்க.

17. அ) மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் யாவை? அவை எவ்வெப்பொருள்களில் வரும் என்பதை விளக்குக.

**(அல்லது)**

ஆ) ஐந்தாம் வேற்றுமையின் உருபும் பொருளும் குறித்து நன்னூலார் கூறுவனவற்றை விவரிக்க.

18. அ) வினைச் சொல்லின் இலக்கணம் யாது? அவற்றின் வகைகளைச் சான்றுடன் எழுதுக.

**(அல்லது)**

ஆ) தொகைநிலைத் தொடர்மொழிகளை விளக்கி எழுதுக.

19. அ) ‘‘மரபாம் ஏழும் மயங்கின்ஆம் வழுவே’’ – விளக்கி வரைக.

**(அல்லது)**

ஆ) யாற்றுநீர், மொழிமாற்றுப் பொருள்கோள்களைச் சான்றுடன் விளக்குக.

20. அ) ஓகார இடைச்சொல் எவ்வெப்பொருளில் வரும் என்பதை நன்னூல் நூற்பாக்கள் வழி புலப்படுத்துக.

**(அல்லது)**

ஆ) ஒரு குணம் தழுவிய உரிச்சொற்கள் குறித்து பவணந்தியார் தரும் இலக்கணத்தைத் தெளிவுபடுத்துக.